**சுருக்கம்**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை – கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவக்குதல்– அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை**

அரசணை (நிலை) எண்.158

நாள்:11.12.2014
ஜய கார்த்திகை 25,
திருவள்ளுவர் ஆண்டு, 2045
படிக்கப்பட்டது:-

தொழிலாளர் ஆணையர் கடிதம் எண்.W1/36150/2014, நாள் 22.08.2014 மற்றும் 1.11. 2014.

ஆணை:-

2014–2015ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரில் 12.08.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இதர அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> ‘‘கட்டுமானப் பணியிடத்தில் 50 அல்லது அதற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்தால், வேலை அளிப்பவரால் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட வேண்டும். குறைவான எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் இவ்வசதி கிடைப்பதில்லை. மேலும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலைக்காக அடிக்கடி இடம் பெயர்ந்து செல்வதால் அவர்களது சொந்த இருப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அங்கன்வாடி வசதிகளையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவங்கப்படும். ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் சுமார் 400 சதுர அடியில், 20 குழந்தைகளைப் பேணும் வகையில் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்படும். இந்த அங்கன்வாடி மையங்களில் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படும். 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பருப்பு வகைகள், தானியங்கள்,

எண்ணெய், காய்கறிகள் அடங்கிய சூடான, சத்தான, சமைத்த மதிய உணவு வழங்கப்படும். உணவுடன் திங்கள், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் ஒரு முட்டையும், செவ்வாய்க் கிழமையன்று கடலைப் பருப்பு அல்லது பச்சைப் பயிறு உணவும், வெள்ளிக் கிழமையன்று உருளைக்கிழங்கு சேர்த்த உணவும் வழங்கப்படும். அவர்களை பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பாலர் பள்ளி வசதி செய்து தரப்படும். கூடுதலாக மருத்துவ பரிசோதனை, தடுப்பூசி, வைட்டமின் 'A' மாத்திரை, மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவை குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கப்படும். மேலும் தாய்–குழந்தை இணைப்பு மருத்துவ அட்டை பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 2 கோடியே 51 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். ''

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் கட்டுமானப் பணிகள் அதிகளவில் நடைபெறும் 50 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவங்குதல் தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. கவனமான பரிசீலனைக்குப்பின்னர், கட்டுமான பணிகள் அதிகளவில் நடைபெறும் 50 இடங்களில் தற்காலிக அங்கன்வாடி மையங்கள் தொடங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் இணைப்பில் கண்டுள்ளவாறு தொடராச் செலவினம் ரூ.1,86,25,000/–லும், தொடரும் செலவினம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.44,90,000/–லும் ஆக மொத்தம் ரூ.2,31,15,000/–ல் (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தியொரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல நிதியைப் பயன்படுத்தி கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:-

(i) இத்திட்டம் தொழிலாளர் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

(ii) கிராமப்புறங்களில் தற்காலிக அங்கன்வாடி மையங்களை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமும், நகர்ப்புறங்களில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை மூலமும் அமைத்து பராமரிக்கப்படும்.

(iii) ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் சுமார் 400 சதுரடி பரப்பளவில், 20 குழந்தைகளை பேணும் வகையில் முன்னமே வடிவமைக்கப்பட்ட பொருட்களால் (Pre-fabricated materials) அமைக்கப்படும். தற்காலிக குடில்களுக்கான தேவை முடிந்தவுடன் அவற்றை அகற்றி வேறு இடத்தில் மறு நிர்ணயம் செய்யப்படும். ஓர் இடத்திலிருந்து குடிலைப் பிரித்து வேறொரு இடத்தில் அமைக்க ஆகும் செலவினம் ரூ.1,65,000/– ஆகும்.

(iv) அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களை மாவட்ட அளவில் தொழிலாளர் துறை அலுவலர்களும், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அலுவலர்களும் இணைந்து தெரிவு செய்வர்.

(v) இந்த அங்கன்வாடி மையங்களில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் வழங்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

(vi) இந்த அங்கன்வாடி மையங்களில் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படும். 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய், காய்கறிகள் அடங்கிய சூடான, சத்தான, சமைத்த மதிய உணவு வழங்கப்படும். உணவுடன் திங்கள், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் ஒரு முட்டையும், செவ்வாய்கிழமையன்று கருப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப் பயறு உணவும், வெள்ளிக்கிழமை அன்று வேக வைத்த உருளைக்கிழங்கு சேர்த்த உணவும் வழங்கப்படும்.

(vii) 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளை பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த பாலர் பள்ளி வசதி செய்து தரப்படும்.

(viii) மருத்துவ பரிசோதனை, தடுப்பூசி, வைட்டமின் 'A' மாத்திரை, மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவை குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கப்படும்.

(ix) தாய் – சேய் இணைப்பு மருத்துவ அட்டை பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

4. இச்செலவினம் தொடர்பான பட்டியல்களை செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–34 அவர்களுக்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் துறை, சென்னை–600 113, இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–600 015 மற்றும் இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 005 கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இத்திட்டத்தின் செயல்பாட்டு நிலை தொடர்பான மாதாந்திர அறிக்கையினை அரசுக்கு அனுப்பும்படி தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மா.வீரசண்முக மணி,**
அரசு செயலாளர்.

**பெறுநர்**

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.

ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை–600 005.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 005.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள், சென்னை–600 113.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–600 015.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 005.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை – 600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை– 600 009.
செயலாளரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை – 600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

இரா. கல்தாரா 11/12/14.
பிரிவு அலுவலர்.
11.12.14

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.158, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ2) துறை, நாள் 11.12.2014**

**தொடரா செலவினம்**

| வ.எண் | விவரம் | செலவினம் – ரூபாயில் |
|---|---|---|
| 1. | 50 தற்காலிக அங்கன்வாடி குடில்கள் ( 1 குடிலுக்கு ரூ.3,65,000/– வீதம்) | 1,82,50,000 |
| 2. | தற்காலிக தொட்டில்கள், பாய்கள், பாத்திரங்கள், கொள்கலன் (Container), வெற்றிடக் குடுவை (Vacuum Flask), தட்டுகள், குவளைகள், (ரூ.4000X50 சத்துணவு மையங்கள்) | 2,00,000 |
| 3. | பதிவேடுகள் (ரூ.1000 X 50 மையங்கள்) | 50,000 |
| 4. | கல்வி உபகரணங்கள் (IEC) (ரூ.500 X 50 மையங்கள்) | 25,000 |
| 5. | எடை கருவி – 3 வகைகள்( ரூ.2000 X 50 மையங்கள்) | 1,00,000 |
| | **மொத்தம்** | **1,86,25,000** |

## தொடரும் செலவினம் – ஓர் ஆண்டிற்கு

| வ.எண் | விவரம் | செலவினம் – ரூபாயில் |
|---|---|---|
| 1. | வாகன வாடகை (ரூ. 30,000/– மாதம் x 12 மாதங்கள் x10 வாகனங்கள்) | 36,00,000 |
| 2. | தொடர் பணியாளர் செலவு (ரூ.750 X 12 மாதங்கள் X 50 மையங்கள்) | 4,50,000 |
| 3. | உதவியாளர் செலவு (ரூ.500 X 1 நபர் x 12 மாதங்கள் X 50 மையங்கள்) | 3,00,000 |
| 4. | மைய சமையல் கூட அங்கன்வாடி பணியாளர் ஊக்கத்தொகை (ரூ.500 X2 நபர்கள் x 12 மாதங்கள் X 10 இடங்கள்) | 1,20,000 |
| 5. | சமையல் எரிவாயு செலவு (ரூ.500x 4 காலாண்டுகள் x 10 இடங்கள்) | 20,000 |
| | **மொத்தம்** | **44,90,000** |

**தொடரா செலவினம்** = ரூ. **1,86,25,000/–**

**தொடரும் செலவினம்** = ரூ. **44,90,000/–**

---

**மொத்த செலவினம்** = ரூ. **2,31,15,000/–**

---

மா.வீரசண்முக மணி,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

இரா.[signature]
11/12/14
பிரிவு அலுவலர்.
[signature] 11.12.14